# ஏப்ரல் - 29 - சனி

**புனித சியன்னா கத்தரின்**

**நீதிமான்களே, ஆண்டவரில் களிகூருங்கள்: நீதியுள்ளோர் அவரைப் புகழ்வது பொருத்தமானதே. திபா. 33:1**

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி 6 : 1 – 7

அக்காலத்தில் சீடர்களின் எண்ணிக்கை பெருகி வந்தது. அப்போது, கிரேக்க மொழி பேசுவோர் தங்களுடைய கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் முறையாகக் கவனிக்கப்படவில்லை என்று எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முணுமுணுத்தனர். எனவே பன்னிரு திருத்தூதரும் சீடர்களை ஒருங்கே வரவழைத்து, ”நாங்கள் கடவுளது வார்த்தையைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறை அல்ல.ஆதலால் அன்பர்களே, உங்களிடமிருந்து, நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய்த் தெரிந்தெடுங்கள். அவர்களை நாம் இந்தப் பணியில் நியமிப்போம். நாங்களோ இறை வேண்டலிலும், இறை வார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம்” என்று கூறினர். திரளாய்க் கூடியிருந்த சீடர் அனைவரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர். அதன்படியே அவர்கள் நம்பிக்கையும் தூய ஆவியும் நிறைந்த ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கோலா, தீமோன், பர்மனா, யூதம் தழுவிய அந்தியோக்கிய நகரத்து நிர்கொலா என்பவர்களைத் தெரிந்தெடுத்துஅவர்களைத் திருத்தூதர் முன்னால் நிறுத்தினார்கள். திருத்தூதர் தங்கள் கைகளை அவர்கள்மீது வைத்து இறைவனிடம் வேண்டினர்.கடவுளது வார்த்தை மேன்மேலும் பரவி வந்தது. சீடர்களின் எண்ணிக்கை எருசலேம் நகரில் மிகுதியாகப் பெருகிக் கொண்டே சென்றது. குருக்களுள் பெருங் கூட்டத்தினரும் இவ்வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நம்பிக்கை கொண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக

## நற்செய்தி : யோவான்6 : 16 – 21

அந்நாட்களில் மாலை வேளையானதும் இயேசுவின் சீடர்கள் கடற்கரைக்கு வந்து,படகேறி மறுகரையிலுள்ள கப்பர் நாகுமுக்குப் புறப்பட்டார்கள், ஏற்கெனவே இருட்டிவிட்டது. இயேசுவும் அவர்களிடம் அதுவரை வந்து சேரவில்லை.அப்போது பெருங்காற்று வீசிற்று கடல் பொங்கி எழுந்தது. அவர்கள் ஐந்து அல்லது ஆறு கிலோ மீட்டர் தொலை படகு ஓட்டியபின் இயேசு கடல்மீது நடந்து படகருகில் வருவதைக் கண்டு அஞ்சினார்கள். இயேசு அவர்களிடம், ”நான்தான், அஞ்சாதீர்கள்” என்றார்.அவர்கள் அவரைப் படகில் ஏற்றிக் கொள்ள விரும்பினார்கள். ஆனால் படகு உடனே அவர்கள் சேரவேண்டிய இடம்போய்ச் சேர்ந்துவிட்டது.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் நாங்கள் ஒவ்வெருவரும் ஏதோவொரு பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம். எவ்வாறான பணிகளாயிருந்தாலும் அவற்றை நாங்கள் நல்ல முறையில் செய்து முடிக்க வேண்டு மென்றும், எவ்வாறான வேளையிலும் ஆண்டவராகிய இயேசு எங்கள் கூட இருந்து வழிநடத்துவார் என்று நம்பிவாழ வேண்டுமென்று கூறுகின்றது. முதல் வாசகத்தில் நாங்கள் இறைவார்த்தைக்கு முன்னுரிமை கொடுத்தவர்களாக வெளி காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாழாமல் இருக்க வேண்டுமென்று கூறுகின்றது. ஆனால் நாங்கள் எவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வாழ்கின்றோம்?. இறை சிந்தனைக்கு, இறைவார்த்தைப் பகிர்விற்கு நேரமில்லை என்று கூறி வேறு செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் நான்தான் அஞ்சாதீர்கள் என்று தான் எப்பொழும் எங்கள் கூட இருக்கின்றார் என்பதை வேதாகமத்தில் பல இடங்களில் வெளிப்படுத்தகின்றார். “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை என்றும் கைவிடுவதில்லை”, பெற்ற தாய் உன்னை மறந்தாலும் நான் என்றும் உன்னை மறவேன்’.’ இயேசுவோடு இருந்து உண்டு, குடித்த சீடர்கள் கூட கடலில் பெருங்காற்று வீசி கடல் கொந்தளித்த வேளையில் பயப்படுகின்றார்கள். அவ்வேளையில் இயேசு கடல்மேல் நடந்து அவர்களிடம் வரும்போது அஞ்சுகின்றார்கள், நடுங்குகின்றார்கள். இயேசு எவ்வாறான சூழ்நிலையிலும் இருந்து பாதுகாப்பார் என்பதை மறந்து விடுகின்றார்கள். எனவேதான் “அஞ்சாதீர்கள் நான்தான்” என்று தைரியப்படுத்துகின்றார். நாங்களும் கூட எவ்வாறாக இறைவனில் விசுவாசங் கொண்டிருக்கின்றோம் எவ்வாறன வேளையிலும் எங்களைப் பாதுகாப்பார் என்கின்றோம் அது வாயளவில் மாத்திரமே. எமது குடும்பம் என்னும் வாழ்க்கைப் படகிலே பலவிதத்தில் புயற்காற்றுக்கள் போன்று துன்பங்கள், வேதனைகள், தாங்கமுடியாத அவமானங்கள் ஏற்படலாம் அவ்வேளையில் நாங்களும் நம்பிக்கையில் தளர்ச்சியுற்று என்ன செய்வதென்று தெரியாது பலவிதமான தேவையற்ற முடிவுகளை எடுத்துவிடுகின்றோம். அவ்வாறாக அல்லாமல் இறை வார்த்தையில் நிலைத்திருந்து அவர் எங்கள் கூடவே இருக்கின்றார் என்று நம்பி எற்றுக்கொண்டவர்களாக அவரது அழைப்பிற்கு செவிகொடுத்து அவர் பணிபுரிய எங்களைத் தயார்படுத்துவோம்.